1990 மே 31]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே இருப்பது The period of agreement on sharing of Cauvery water between Tamil Nadu and Karnataka, பிராக்கெட்டிலே State of Mysore என்பது இதுவே ஆபத்தாகும்'' Come to an end on 1974. என்று இருக்கிறது. திரு. பாலசுப்பிரமணியம் தலை குனிந்துவிட்டார்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் கவனிக்க வேண்டும். இதற்குமேல் இதை நீட்ட வேண்டாமே. (குறுக்கீடு) தேவை இல்லை. அருள்கூர்ந்து எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) வேண்டாம்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், 4 ஆம் தேதி உச்ச நீதி மன்றத்தினுடைய தீர்ப்பு வந்த பிறகு ஏற்கெனவே முதல்வரவர்கள் அறிவித்தபடி ஒரு விவாதத்திற்கு நாள் ஒதுக்கி அதைப்பற்றிப் பின்னால் பேசுவது தமிழ்நாட்டிற்கு நல்லதாக இருக்கும். அந்தக் கருத்திலே இந்தப் பிரச்சினையை திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னதுபோல இந்த அளவிலே முடித்துக் கொள்ளலாம் என்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பிரச்சினை இத்துடன் முடித்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடு) இன்னொரு நாளைக்குப் பேசலாம். தனியாக விவாதத்திற்கு ஏற்பாடு செய்வோம். அப்பொழுது வந்து என்னென்ன தவறுகள் என்றெல்லாம் பார்த்துவிடுவோம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10-25 மணி

3. அறிக்கை அளித்தல்.

(அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக 1989-90-ஆம் ஆண்டிற்கான 47 மற்றும் 48-வது அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கிறேன். போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக, பதிவு எடுத்த பிரதிகள் அளிக்கப் பட்டுள்ளன. இந்த அறிக்கைகளின் பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக

வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப் படும்.

(ஆ) மனுக்கள் குழு.

திரு. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, 1989-90-ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் முதலாவது அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

4. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, ஏற் கெனவே 1937 ஆம் ஆண்டு தமிழ் நாடு மதுவிலக்கு சட்ட திருத்த முன்வடிவு ஒன்றை இங்கே நாம் விவாதித்தோமே, அதற்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்து விட்டார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, மாநில ஆளுநர் ஒப்புதல் அளிக்கவில்லை என்றால் அந்தச் சட்ட முன்வடிவு இன்னும் நிலுவையில் இருக்கிறது என்று பொருள். அந்தச் சட்ட முன்வடிவு நிலுவையில் இருக்கிறபோது, மீண்டும் ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டுவரக்கூடாது என்பது விதிமுறை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, இப்போது 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது விலக்கு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன். ஏற்கெனவே 1937 ஆம் ஆண்டு சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வரப்பட்டது. தற்கு கவர்னருடைய இசைவு வந்திருக்கிறது.